**பூஜாபிடிய பிரதேச சபை**
**கண்டி மாவட்டம்**

-------------------------------------

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2017 மார்ச் 29 ஆந் திகதியும் முன்னைய ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2016 மார்ச் 31 ஆந் திகதியும் கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்தன.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 1.3 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கங்களைத் தவிர்த்து பூஜாபிடிய பிரதேச சபையின் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 பெறவேண்டிய மற்றும் செலுத்தப்பட வேண்டிய கணக்குகள்

**(அ) பெறவேண்டிய கணக்குகள்**

2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பெறவேண்டிய 4 கணக்கு உருப்படிகளின் கூட்டுப்பெறுமதி ரூபா 19,572,485 தொகையாக இருந்ததுடன், அதில் 1 இற்கும் 5 வருடங்களிற்கும் இடைப்பட்ட காலம் கடந்த கணக்கு மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 3,829,402 ஆக இருந்தது. 2017 ஏப்ரல் 30 இல் உள்ளவாறு ரூபா 19,207,431 தொகை மேலும் அறவிட வேண்டியிருந்தது.

**(ஆ) செலுத்தப்பட வேண்டிய கணக்குகள்**

2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறு காணப்பட்ட 83 கடன்கொடுத்தோர் மீதிகளின் கூட்டுப்பெறுமதி ரூபா 28,803,447 ஆக இருந்ததுடன், அதில் 1 இற்கும் 5 வருடங்களுக்கு இடைப்பட்ட காலம் கடந்த கணக்கு மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 4,274,053 ஆக இருந்தது.

#### 1.3.2 கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை

2016 திசெம்பர் 31 வரை காணப்பட்ட ரூபா 2,022,228 ஆன பொது வைப்புக்கள் மீதியைப் பரீட்சிப்பதற்கு முடியுமான வகையில் பதிவேடுகள் சமர்ப்பிக்கப்படாமையால் அக் கொடுக்கல் வாங்கல்களை கணக்காய்வின் போது திருப்திகரமாகச் சான்றுறுதிப்படுத்த முடியாதிருந்தது.

### 1.3.3 சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடன் இணக்கமின்மைகள்

2007 மே 11 ஆந் திகதிய 09/2007 ஆம் இலக்க பொது நிர்வாக சுற்றறிக்கையின் 5 ஆம் பந்தியின் பிரகாரம் மீண்டும் சேவையில் ஈடுபடுத்தப்பட்ட ஓய்வுபெற்றவரின் ஓய்வூதியத்துடன் உரிய வாழ்க்கை செலவினக் கொடுப்பனவும் கிடைப்பதுடன், மீண்டும் சேவையில் ஈடுபடுத்துவதன் கீழ் அவருக்கு வாழ்க்கை செலவினப் படிகள் உரித்து இல்லாதிருந்த போதிலும் 2015 மே 01 ஆந் திகதி முதல் 6 மாத காலப்பகுதிக்காக ஒப்பந்த அடிப்படையில் சேவையில் ஈடுபடுத்தி மீண்டும் காலம் நீடிக்கப்பட்டிருந்த தொழில்நுட்ப சேவையின் (சிவில்) உத்தியோகத்தரொருவருக்கு மீண்டும் சேவையில் ஈடுபடுத்தப்பட்டமைக்காக வழங்கப்படும் படிகளுக்கு மேலதிகமாக மாதமொன்றுக்கு ரூபா 4,275 வீதம் வாழ்க்கை படிக் கொடுப்பனவாக ரூபா 32,062 தொகை 2016 மே முதல் திசெம்பர் வரையான காலப்பகுதிக்கு கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது.

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2016 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்காக சபையின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 11,992,559 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டிற்கான மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 8,147,059 ஆக இருந்தமையால் நிதி விளைவுகளில் ரூபா 3,845,500 தொகையான அதிகரிப்பொன்றைக் காணக்கூடியதாக இருந்தது.

### 2.2 வருமான நிருவாகம்

### 2.2.1 வீத வரி

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) 2016 சனவரி 01 ஆம் திகதியில் உள்ளவாறு நிலுவை வீதவரி மீதி ரூபா 2,911,094 ஆக இருந்ததுடன், ஆண்டில் பட்டியலிடல் ரூபா 3,133,016 ஆக இருந்ததுடன், அதில் 2016 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் முறையே ரூபா 1,884,838 மற்றும் ரூபா 1,938,663 அறவிடப்பட்டிருந்தன. இது 64 சதவீதமாகவும் 62 சதவீதமாகவும் இருந்தன. 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 2,220,609 ஆன நிலுவை மீதியொன்று காணப்பட்டதுடன் வருமான சேகரிப்பு பலவீனமான மட்டத்தில் காணப்பட்டன.

(ஆ) 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறு காணப்பட்ட ரூபா 80,184 ஆன நிலுவை வீதவரி தொகை பல வருடங்களாக கமநல சேவைகள் திணைக்களத்திடமிருந்து அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.2.2 ஏனைய வருமானம்

#### (அ) முச்சக்கர வண்டிக் கட்டணம்

முச்சக்கர வண்டி நிறுத்துவதற்காக ஒரு வண்டியிடமிருந்து மாதமொன்றுக்கு ரூபா 50 அறவிடுவதற்கு மீளாய்வாண்டின் போது தீர்மானிக்கப்பட்டிருந்த போதிலும் 2016 திசெம்பர் 31 ஆந் திகதி வரையில் பதிவுசெய்யப்பட்ட 43 முச்சக்கர வண்டிகளிலிருந்து உப விதிகளை பிறப்பித்து ரூபா 25,800 தொகையை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**(ஆ) அறிவித்தல் பதாகைக் கட்டணங்கள்**

சபை அதிகாரப் பிரதேசத்தில் நிர்மாணிக்கப்பட்டிருந்த 10 தனியார் நிறுவனங்களுக்குரிய அறிவித்தல் பதாகைகளிலிருந்து ரூபா 881,600 தொகை அறவிடுவதற்கு இருந்ததுடன் இத்தொகை 1 ஆண்டிற்கும் 3 ஆண்டுகளிற்கும் இடைப்பட்ட காலவீச்சில் இருந்தன.

**2.2.3 நீதிமன்றத் தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்**

மாகாண சபையின் பிரதான செயலாளரிடம் இருந்தும் ஏனைய அதிகாரிகளிடம் இருந்தும் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நீதிமன்றத் தண்டப்பணமாக ரூபா 637,841 தொகையும் முத்திரைக் கட்டணமாக ரூபா 9,191,420 தொகையும் பெறவேண்டியதாகக் காணப்பட்டது.

**3. செயற்பாட்டு மீளாய்வு**

**3.1 செயலாற்றல்**

(அ) மீளாய்வாண்டின் இறுதித் திகதியில் உள்ளவாறு சபையின் மீண்டெழும் வருமானம் ரூபா 24,243,850 ஆக இருந்ததுடன் அதில் ரூபா 135,710 அதாவது 0.6 சதவீதம் மாத்திரம் அபிவிருத்தி நடவடிக்கைளுக்காக பயன்படுத்தப்பட்டிருந்தன. அதன் பிரகாரம் 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை சபை சட்டத்தின் 3 ஆம் பிரிவின் பிரகாரம் பிரதேச சபையின் நோக்கங்கள் மற்றும் செயற்பாடுகள் போதியளவில் நிறைவேற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை சபை சட்டத்தின் 85(ஆ) பிரிவில் குறிப்பிடப்பட்டதன் பிரகாரம் ஒவ்வொரு பிரதேச சபை எல்லைக்கு பொதுமக்கள் நடமாடும் சகல இடங்களிலும் தேவையான வகையில் பொது மலசலகூட வசதிகளை வழங்குவது சபையின் பிரதான செயற்பாடொன்றாக இருந்த போதிலும், அங்கும்புற நகரில் அமைந்துள்ள பொது மலசலகூடத்தின் தாங்கிக்கு ஊற்று நீர் சேர்ந்து எந்நேரமும் நிரம்பி வழிவதால் ஓராண்டிற்கு மேற்பட்ட காலம் பயன்படுத்தப்படாமல் மூடி வைக்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் நாளாந்தம் அதிகளவில் மக்கள் நடமாடும் அங்கும்புற நகருக்கு அத்தியவசிய பொது மலசலகூட வசதிகளை வழங்குவதற்கு பிரதேச சபைக்கு முடியாதிருந்தது.

(இ) 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை சபை சட்டத்தின் 78(1) பிரிவில் குறிப்பிட்டதன் பிரகாரம் நோக்கத்திற்குட்பட்ட செயற்பாடுகளை நிறைவேற்றதற்காக மீளாய்வாண்டில் பொது சுகாதார நிகழ்ச்சித்திட்டங்கள் 2 ஆம் இலக்கத்தின் கீழ் 5 செலவின விடயங்களுக்கு ஒதுக்கப்பட்டிருந்த ரூபா 34,000 நிதிஏற்பாடு நோக்கத்திற்குரிய செயற்பாடுகளை நிறைவேற்றுவதற்கு பயன்படுத்தப்படாமல் 2016 திசெம்பர் 31 ஆம் திகதி அளவில் நூறு சதவீதமும் சேமிக்கப்பட்டிருந்தது.

(ஈ) 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை சபை சட்டத்தின் 22 ஆம் பிரிவின் பிரகாரம் நோக்கத்திற்குட்பட்ட செயற்பாடுகளை நிறைவேற்றதற்காக 3 ஆம் இலக்க நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் 5 செலவின விடயங்களுக்கு ஒதுக்கப்பட்டிருந்த ரூபா 66,000 நிதிஏற்பாடு நோக்கத்திற்குரிய செயற்பாடுகளை நிறைவேற்றுவதற்கு பயன்படுத்தப்படாமல் 2016 திசெம்பர் 31 ஆம் திகதி அளவில் நூறு சதவீதமும் சேமிக்கப்பட்டிருந்தது.

### 3.2 முகாமைத்துவ திறமையீனங்கள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) சபையின் அங்கீகரிக்கப்படாத 3 பதவிகளுக்காக 12 ஊழியர்கள் ஆட்சேர்ப்பு செய்யப்பட்டிருந்ததுடன் அப்பதவிகளை அங்கீகரித்துக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) வீதித் தொழிலாளர்கள், சுகநலன் தொழிலாளர்கள் மற்றும் தொழிலாளர்கள் போன்ற பதவிகளையுடைய 7 பேர் அலுவலகத்தின் வருமான நடவடிக்கைகள், முன்பள்ளி அலுவல்கள், பொது மக்கள் முறைப்பாடுகள் போன்ற பொறுப்புக்கூற வேண்டிய கடமைகளுக்காக சேவைகயில் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர். இதன் காரணமாக மனித வளங்கள் முறையற்ற விதத்தில் பயன்படுத்தப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டதுடன் இந்த ஊழியர்களுக்காக மீளாய்வாண்டில் ரூபா 2,204,339 சம்பளம் மற்றும் படிகளாக வழங்கப்பட்டிருந்தன.

(இ) ஏனைய 5 வருமான விடயங்களின் கீழ் பெறவேண்டிய ரூபா 401,576 ஆன மீதியொன்று வருடக் கணக்காக அறவிடப்பட வேண்டிய போதிலும் அம்மீதிகளை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறு சபையின் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் மற்றும் உள்ளவாறான பதவியணியினர் என்பவற்றை ஒப்பிடும் போது 11 பதவி வெற்றிடங்களும் 14 மிகை பதவிகளும் காணப்பட்டன.

### 3.3 செயற்பாட்டுத் திறமையின்மை

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) பிரதேச சபைக்குச் சொந்தமான பூஜாபிட்டிய, அம்பதன்ன மற்றும் அங்கும்புற ஆகிய 3 வர்த்தக தொகுதிகளில் 66 கடைகள் காணப்பட்டதுடன் அது தொடர்பாக பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(i) சபைக்குச் சொந்தமான கடைகளை குத்தகைக்கு வழங்கும் போது சபை மற்றும் குத்தகையாளர்களுக்கு இடையே குத்தகை ஒப்பந்தமொன்று இல்லாமல் சபைக்குச் சொந்தமான பூஜாபிட்டிய, அம்பதன்ன மற்றும் அங்கும்புற வர்த்தக தொகுதிகளில் 06 கடைகள் குத்தகைக்கு வழங்கப்பட்டிருந்தன.

(ii) குத்தகை உடன்படிக்கையின் 27 ஆம் பிரிவின் பிரகாரம் 2016 மார்ச் 17 ஆந் திகதிய 2016/3 ஆம் இலக்க உள்ளூராட்சி மன்ற ஆணையாளரின் சுற்றறிக்கையின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் குத்தகை வழங்கப்படும் கடைகளை குத்தகையாளரால் வேறு தரப்பினருக்கு உப குத்தகைக்கு வழங்கவோ அல்லது விற்பனை செய்யவோ முடியாத போதிலும் மேற்படி 3 ஆவது வர்த்தகத் தொகுதியின் 23 கடைகள் ரூபா 3,000 இற்கும் ரூபா 10,000 இற்கும் இடைப்பட்ட மாதாந்த வாடகைக்கு ஏனைய தரப்பினருக்கு உப குத்தகைக்கு வழங்கப்பட்டிருந்தன.

(iii) குத்தகை உடன்படிக்கையின் 20 ஆம் பிரிவின் பிரகாரம் 5 நாட்களுக்கு மேல் மூடிவைக்கப்படக் கூடாத போதிலும் மேற்படி 3

ஆவது வியாபார தொகுதியில் 7 கடைகள் ஓராண்டிற்கு மேற்பட்ட காலமாக மூடப்பட்டிருந்தன.

(iv) மேற்படி 3 ஆவது வியாபார தொகுதியின் கடை, விலை மதிப்பீட்டுத் திணைக்களத்தினால் மதிப்பிடப்பட்டு மதிப்பீட்டு அறிக்கை 2016 செப்தெம்பர் 09, 2015 மார்ச் 02 மற்றும் 2016 மே 30 ஆகிய திகதிகளில் சபைக்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்த போதிலும் 2017 சனவரி 10 ஆந் திகதி வரையிலும் அவ்வறிக்கையின் பிரகாரம் கடை வாடகையை திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(v) அம்பதன்ன வியாபார தொகுதியின் 10, 11 மற்றும் 12 ஆம் இலக்க 3 கடைகளுக்கு எதிராக வழக்கு தொடரப்பட்டுள்ளதால் இக்கடைகள் 2007 ஆம் ஆண்டிலிருந்து மூடப்பட்டிருந்தன.

(ஆ) 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறு வெளிப்படுத்தப்பட்டிருந்த அத்துமீரிய 9 நிர்மாணங்கள் தொடர்பாக வழக்கு தொடருவதற்கு தீர்மானிக்கப்பட்டிருந்த போதிலும், 2017 சனவரி 10 ஆந் திகதி வரையிலும் அந்நிர்மாணம் தொடர்பாக வழக்கு தொடருவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**3.4 சர்ச்சைக்குரிய தன்மையிலான கொடுக்கல் வாங்கல்கள்**

---

அம்பதன்ன வியாபார தொகுதியின் மேல் மாடியின் 3 ஆம் இலக்க கடை முறையற்ற விதத்தில் குத்தகைக்கு வழங்கப்பட்டமை தொடர்பாக பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) மேற்குறித்த கடை குத்தகை உடன்படிக்கையொன்றில்லாமல் வெளித்தரப்பினருக்கு வழங்கப்பட்டிருந்தன.

(ஆ) இக்கடைக்கு 2007 ஆம் ஆண்டிலிருந்து வாடகை அறவீடொன்று இடம்பெறவில்லை. மேலும் கடை வாடகை பதிவேட்டில் உள்ளடக்கப்பட்டு பட்டியிலிடலும் மேற்கொள்ளப்படாமையால் சபைக்கு ரூபா 120,000 ஆன வருமானம் இழக்கப்பட்டிருந்ததுடன் இக்கடை 2015 மார்ச் 05 வரை வேறு தரப்பினரால் குடியிருப்பிற்காக பயன்படுத்தப்பட்டிருந்தது.

(இ) குறித்த கடைக்காக நிலுவையாக இருந்த ரூபா 200,000 தொகை சபையின் முன்னால் உறுப்பினரொருவரின் 2012 ஏப்ரல் 08 ஆந் திகதி மேற்கொண்ட வேண்டுகோளின் பிரகாரம் அவரின் கொடுப்பனவிலிருந்து பகுதி பகுதியாக அறவிடப்பட்டிருந்தது.

(ஈ) 1987 இன் 15 ஆம் இலக்க 219 ஆம் பிரிவின் பிரகாரம் பிரதேச சபையொன்றின் எவரேனும் உறுப்பினரொருவருக்கோ அல்லது ஊழியருக்கு பிரதேச சபையுடன் ஏற்படுத்தப்பட்ட அல்லது செயற்பாட்டில் ஈடுபடுத்தப்படும் ஏதேனும் உடன்படிக்கையொன்றோ அந்த வகையில் இருக்க கூடாத போதிலும் மேற்படி 03 ஆம் இலக்க கடையின் நிலுவையாக இருந்த ஆரம்ப தொகை அப்போதிருந்த முன்னால் உறுப்பினரிடமிருந்து கொடுப்பனவிலிருந்து அறவிடப்பட்டிருந்தது.

**3.5 விளைவற்ற குறைப்பயனபாட்டிலான சொத்துக்கள்**

---

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) ரூபா 14,767,144 பெறுமதியான 4 வாகனங்களும் பெறுமதி மதிப்பிட முடியாத 2 வாகனங்களும் 1 ஆண்டிற்கும் 3 ஆண்டுகளுக்கும் இடைப்பட்ட காலமாக விளைவற்றும் குறைப்பயன்பாட்டுடனும் காணப்பட்டன.

(ஆ) குறைந்த வருமானமுடைய உள்ளூராட்சி மன்றங்களின் அபிவிருத்தி செயற்பாடுகளுக்காக தேவையான நிதி ஒத்துழைப்பினை பெற்றுக் கொள்வதன் கீழ் ரூபா 2,521,700 தொகை செலவிடப்பட்டு கழிவுப்பொருள் முகாமைத்துவ நிலையமொன்று நிர்மாணிக்கப்பட்டு 2015 சனவரி 20 ஆந் திகதி வேலை பூர்த்தி செய்யப்பட்டிருந்த போதிலும் அத்திகதி முதல் உரிய நிலையம் மூடப்பட்டிருந்தது.

(இ) சபைக்குச் சொந்தமான மாரதுகொடை உடற்பயிற்சி நிலையத்தை நடாத்திச் செல்வதற்காக விளையாட்டு மதியுரையாளர் ஒருவர் இல்லாமை காரணமாக 2015 செப்தம்பர் 14 ஆந் திகதி முதல் மூடப்பட்டிருந்ததுடன் அதன் காரணமாக ரூபா 624,269 மாத்திரம் பெறுமதியான உடற் பயிற்சி உபகரணங்கள் பயன்படுத்தப்படாமல் விளைவற்றுக் காணப்பட்டன.

**3.6 ஒப்பந்த நிர்வாகம்**

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) மீளாய்வாண்டிற்காக சபை நிதியத்திலிருந்து செயற்படுத்துவதற்கு நிர்ணயிக்கப்பட்டிருந்த அபிவிருத்தி முன்மொழிவுகள் ஆண்டின் ஆரம்பத்தின் போது அங்கீகாரத்தைப் பெற்று செயற்படுத்த முடியுமாக இருக்கையில் சபையினால் ரூபா 689,122 ஆன மதிப்பீட்டுப் பெறுமதியடைய 5 அபிவிருத்தி திட்டங்கள அங்கீகாரத்திற்காக 2016 மே 20 மற்றும் 2016 யூலை 26 ஆந் திகதிகளில் தலைமை அமைச்சருக்கு சமர்ப்பிப்பதற்காக உள்ளூராட்சி மன்ற ஆணையாளருக்கு அனுப்பி வைக்கப்பட்டிருந்ததுடன் 2016 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் இம்முன்மொழிவுகளுக்காக அங்கீகாரம் கிடைத்து அதில் 3 மாத்திரம் செயற்படுத்தப்பட்டிருந்தன.

(ஆ) பிரதேச சபைகளை பலப்படுத்தும் நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் செயற்படுத்துவதற்கு எதிர்பார்த்த ரூபா 5,775,000 தொகையான மதிப்பிடப்பட்ட பெறுமதியான 16 நிர்மாண வேலைகளுக்காக உள்ளூராட்சி அமைச்சினால் அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்த போதிலும் 2016 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் ரூபா 1,750,000 பெறுமதியான 5 நிர்மாண வேலைகள் ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை.

**4. நல்லாளுகையும் கணக்களிப்பொறுப்பும்**

**4.1 பாதீட்டுக் கட்டுப்பாடு**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

(அ) மீளாய்வாண்டிற்காக தயாரிக்கப்பட்டிருந்த பாதீட்டின் படி, மதிப்பிடப்பட்ட வருமானம் மற்றும் செலவினம், உள்ளபடியான வருமானம் மற்றும் செலவினத்துடன் ஒப்பிடப்படுகையில் 05 வருமான விடயங்களில் 28 சதவீதம் முதல் 51 சதவீதம் வரையிலும், 06 செலவின விடயங்களில் 24 சதவீதம் முதல் 69 சதவீதம் வரையிலும் முரண்கள் அவதானிக்கப்பட்டமையால் பாதீடு ஆக்கபூர்வமான கட்டுப்பாட்டு சாதனமாகப் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2016 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் 26 வருமான விடயங்களுக்காக ஒதுக்கப்பட்டிருந்த ரூபா 589,500 ஆன நூறு சதவீத நிதிஏற்பாடுகளும் சேமிக்கப்பட்டிருந்தன.

**4.2 வருடாந்த கொள்வனவுத் திட்டம்**

மீளாய்வாண்டில் ரூபா 37,167,717 ஆன மூலதனச் செலவினம் சபையினால் செலவிடப்பட்டிருந்த போதிலும், பெறுகைகள் திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

**4.3 கூட்டிணைந்த திட்டம்**

மீளாய்வாண்டினை மேவுகை செய்யும் வகையில் கூட்டிணைந்த திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

**4.4 செயல்நடவடிக்கைத் திட்டம்**

மீளாய்வாண்டிற்காக செயல்நடவடிக்கைத் திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

**5. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்**

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுத் துறைகள் தொடர்பாக விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) ஒப்பந்த நிருவாகம்
(ஆ) வருமான நிருவாகம்
(இ) சொத்துக்கள் முகாமைத்துவம்
(ஈ) கடன்பட்டோர் மற்றும் கடன்கொடுத்தோர்